# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).**

******

**முறையீட்டு மனு எண். 22/18–நகராட்சி**

**ஆணை நாள். 25.09.2019.**

******

09.02.2018 நாளிட்ட குமுதம் ரிப்போர்ட்டர் நாளிதழ் செய்தி. -- இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்தது .

நகராட்சி ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம். — எதிர்மனுதாரர்.

ஆணை.

09.02.2018 நாளிட்ட குமுதம் ரிப்போர்ட்டர் நாளிதழில் வெளி வந்துள்ள நாகப்பட்டினம் நகராட்சி தொடர்பான செய்தியினை, இம்முறைமன்ற நடுவம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7(1) ன் கீழ் தாமாக முன் வந்து விசாரணை மேற்கொள்ள முடிவு செய்து வழக்காக பதிவு செய்து முறையீட்டு மனு எண். 22/2018 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

09.02.2018 நாளிட்ட குமுதம் ரிப்போர்ட்டர் இதழில் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகராட்சியில் ஓடாத காருக்கு டீசல் மற்றும் இல்லாத கழிப்பிடம் சீரமைப்பு என்ற தலைப்பில் நாகப்பட்டினம் நகராட்சில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

23.03.2018 நாளிட்ட நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கையில் மேற்படி குமுதம் ரிப்போர்ட்டர் செய்திக்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி குமுதம் ரிப்போர்ட்டர் இதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட திரு. பாஸ்கரன், நாகை, திருவாரூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள் சங்கத் தலைவரை இம்முறையீடு குறித்து விளக்கமளிக்க இம்முறைமன்ற நடுவத்தில் 07.06.2018 அன்று விசாரணைக்கு ஆஜராகத் தெரிவித்து 20.04.2018 நாளிட்ட அழைப்பாணையில் ஆணையிடப்பட்டது. ஆனால் மேற்படி நாகை, திருவாரூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு உரிமைச் சங்கத் தலைவர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

05.03.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 28.03.2019 அன்று ஆஜரான நாகப்பட்டினம் நகராட்சிப் பொறியாளர் திரு.கா.இரவிச்சந்திரன் தனது வாக்குமூலத்தில், தான் மேற்படி நகராட்சியில் 15.05.2017 முதல் நகராட்சிப் பொறியாளராக பணிபுரிந்து வருவதாகவும், குமுதம் ரிப்போர்ட்டர் இதழில் வெளிவந்துள்ள புகார்கள் நடைபெற்ற காலத்தில் தான் மேற்படி நகராட்சியில் பணிபுரியவில்லை எனவும், இது சம்பந்தமாக ஒரு அறிக்கையினை ஒரு வாரத்திற்குள்

சமர்ப்பிப்பதாகவும், மேற்படி பணிகள் நடைபெற்ற காலத்தில் திரு.மெய்ப்பொருள் என்பவர் உதவிப் பொறியாளராகவும், அவருக்கு பிறகு திரு.ராதா என்பவர் நகராட்சிப் பொறியாளராக கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும் தற்போது அவர் பெரம்பலூர் நகராட்சியில் பணிபுரிவதாகவும், நகராட்சி ஆணையாளர் திரு.ஜான்சன் என்பவர் பணியிலிருந்து ஓய்வு பெற்று தற்போது எங்கிருக்கிறார் எனத் தெரியாது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திரு.கி. இரவிச்சந்திரன், நாகப்பட்டினம் நகராட்சிப் பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு 03.04.2019 நாளிட்ட அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். அதில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரின் 04.05.2017 நாளிட்ட உத்திரவின்படி நாகப்பட்டினம் நகராட்சிக்கு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ள ரூ.100.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதாகவும், மேற்படி ஆணையினை எதிர்நோக்கி கடும் வறட்சியினை போக்கும் வகையில் நாகப்பட்டினம் நகர் நிலத்தடி நீரின் உவர்தன்மை அதிகாரித்து இருப்பதால் புதியதாக போர் வெல் அமைத்திட Geological Report அறிக்கையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருந்து பெற்று, அதன் அடிப்படையில் 1,000 அடி ஆழத்திற்கு கீழ்வேளூர் புனித தேவாலயம் அருகில் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டிலும், ஓடாச்சேரி ஆற்றுப் படுகை ஓரத்தில் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டிலும், பட்டமங்கலம் பஞ்சாயத்து கொண்டல்வண்ணம் குளம் அருகில் ரூ.25.00 லட்சம் மதிப்பீட்டிலும், பரங்கிநல்லூர், எரவஞ்சேரி பஞ்சாயத்து பகுதியில் ரூ.25.00 லட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் நகராட்சி, வெளிப்பாளையம் மேல் நீர்த்தேக்கத் தொட்டி அமைவிடத்தில் 2.25 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டிலும் ஆக கூடுதல் ரூ.100.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய தொழில் நுட்ப அனுமதிகள் பெறப்பட்டு, விதிமுறைகள் பின்பற்றப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, நகர் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டதாகவும், மேற்படி பணிகள் முடிக்கப்பட்டு, அளவீடுகள் மற்றும் மேல் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு மண்டல செயற் பொறியாளரின் சோதனை மேற்கொண்ட பின்னரே மேற்கண்ட பணிகளுக்கு பட்டியல் வழங்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

30.07.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி, 18.09.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நாகப்பட்டினம் நகராட்சி முன்னாள் ஆணையாளர் திரு.ஜான்சன் தனது வாக்குமூலகத்தில் தான் மேற்படி நாகப்பட்டினம் நகராட்சியில் 13.05.2015 முதல் 31.03.2018 வரை பணி புரிந்தததாகவும், குமுதம் ரிப்போர்ட்டர்ஸ் பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள திருவாரூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு நலச்சங்கத் தலைவர் என குறிப்பிட்டுள்ள திரு.பாஸ்கரன் என்பவர் பொதுவாக ஆதாய நோக்கத்தோடு மனுக்கள் எழுதும் பழக்கம் உள்ளவர் எனவும், மேற்படி நபரை தான் தனது பணிக்காலத்தில் பார்த்தது இல்லை எனவும், ஆனால் நகராட்சி அலுவலகத்திற்கு அடிக்கடி வந்து பணியாளர்களுடன் வாக்குவாதம் செய்வார் எனவும், நகராட்சி நல அலுவலர் பயன்பாட்டிற்கு வாகனம் இல்லை என்பதால் நகராட்சித் தலைவரின் காரை பயன்படுத்தியுள்ளதாகவும், அதற்கு முன்னர் உதவித் தேர்தல் அலுவலர் அந்த காரை பயன்படுத்தியுள்ளதாகவும், தற்போது வரை மேற்படி காரினை நகராட்சி நல அலுவலரே பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். இது குறித்து 23.03.2018 அன்று ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும், பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து பணிகளும் விதிகளின்படி எந்த விதி மீறலும் இன்றி செய்யப்பட்டுள்ளது எனவும், பத்திரிக்கை செய்திகள் அனைத்தும் உண்மைக்கு மாறானது எனவும், தான் பணியில் இருந்த வரை திரு.பாஸ்கரன் என்பவர் தன்னிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

30.07.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 18.09.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நாகப்பட்டினம் நகராட்சி முன்னாள் நகராட்சிப் பொறியாளர் திரு. கே.மெய்ப்பொருள் தனது வாக்குமூலத்தில் தான் நாகப்பட்டினம் நகராட்சியில் மூன்று மாதங்கள் மட்டுமே கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்ததாகவும், தனது பணிக்காலத்தில் வாணக்காரத் தெருவில் தார்ச்சாலை மட்டுமே போடப்பட்டுள்ளதாகவும், திரு.வசந்தன், உதவிப் பொறியாளரால் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு தன்னால் மேலளவு

செய்யப்பட்டதாகவும், நகராட்சி நிர்வாக மண்டலப் பொறியாளரால் தணிக்கை செய்யப்பட்டதாகவும், இதில் விதி மீறல்கள் ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மேற்படி குமுதம் ரிப்போர்ட்டர் இதழில் செய்தி வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நாகை, திருவாரூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத் தலைவரிடம் விசாரணை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பியும் மேற்படி நபர் விசாரணைக்கு ஆஜராகாத நிலையில் மேற்படி பொருள் தொடர்பாக அவரால் கூறிக் கொள்ள ஏதும் இல்லை எனக் கருதி, நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலங்களில் அடிப்படையில் இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையினை கைவிட இம்முறைமன்ற நடுவத்தால் முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

செயலாளர்

பெறுநர்

1.நகராட்சி ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம்.

2.நகராட்சி மண்டல உதவி இயக்குநர்,
தஞ்சாவூர்

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.